ஸ்ரீ:

ஸ்ரீமதே நிக$_3$மாந்தமஹாதே$_3$ஶிகாய நம:

ஸ்ரீமாந் வேங்கடநாதா$_2$ர்ய: கவிதார்க்கிககேஸரீ ।
வேதா$_3$ந்தாசார்யவர்யோ மே ஸந்நித$_4$த்தாம் ஸதா$_3$ ஹ்ருதி$_3$ ॥

பெரியாழ்வார் அருளிச்செய்த

# ॥ நல்லதோர்தாமரை ॥

*This document* has been prepared by*

***Sunder Kidambi***

*with the blessings of*

ஸ்ரீ ரங்க$_3$ராமாநுஜ மஹாதே$_3$ஶிகன்

**His Holiness *śrīmad āṇḍavan* of *śrīraṅgam***

*This was typeset using skt, LaTeX, Itrans, and the iitmtam font.

ஸ்ரீ:
ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

# ॥ நல்லதோர்தாமரை ॥

## மாயவன் பின்சென்ற மகளை உன்னித் தாய் இரங்குதல்

‡நல்லதோர் தாமரைப் பொய்கை⋆
    நாண் மலர் மேல் பனி சோர⋆
அல்லியும் தாதும் உதிர்ந்திட்டு⋆
    அழகழிந்தால் ஒத்ததாலோ⋆
இல்லம் வெறியோடிற்றாலோ⋆
    என் மகளை எங்கும் காணேன்⋆
மல்லரை அட்டவன் பின்போய்⋆
    மதுரைப் புறம் புக்காள் கொல்லோ (1)

ஒன்றும் அறிவொன்றில்லாத⋆ உருவறைக் கோபாலர் தங்கள்⋆
    கன்று கால் மாறுமா போலே⋆ கன்னி இருந்தாளைக் கொண்டு⋆
நன்றும் கிறி செய்து போனான்⋆ நாராயணன் செய்த தீமை⋆
    என்றும் எமர்கள் குடிக்கு⋆ ஓர் ஏச்சுச்சொல் ஆயிடுங்கொல்லோ (2)

குமரி மணம் செய்து கொண்டு⋆
    கோலம் செய்தில்லத்திருத்தி⋆
தமரும் பிறரும் அறியத்⋆
    தாமோதரற்கென்று சாற்றி⋆
அமரர் பதியுடைத் தேவி⋆
    அரசாணியை வழிபட்டு⋆
துமிலம் எழப் பறை கொட்டித்⋆
    தோரணம் நாட்டிடுங்கொல்லோ (3)

ஒரு மகள் தன்னை உடையேன்⋆
    உலகம் நிறைந்த புகழால்⋆
திருமகள் போல வளர்த்தேன்⋆
    செங்கண் மால் தான் கொண்டு போனான்⋆
பெரு மகளாய்க் குடி வாழ்ந்து⋆

பெரும் பிள்ளை பெற்ற அசோதை⋆
மருமகளைக் கண்டுகந்து⋆
மணாட்டுப் புறம் செய்யுங்கொல்லோ (4)

தம் மாமன் நந்தகோபாலன்⋆
தழீ இக்கொண்டென் மகள் தன்னை⋆
செம் மாந்திரே என்று சொல்லிச்⋆
செழுங்கயற் கண்ணும் செவ்வாயும்⋆
கொம்மை முலையும் இடையும்⋆
கொழும்பணைத் தோள்களும் கண்டிட்டு⋆
இம் மகளைப் பெற்ற தாயர்⋆
இனித் தரியார் என்னுங்கொல்லோ (5)

வேடர் மறக்குலம் போலே⋆ வேண்டிற்றுச் செய்தென் மகளை⋆
கூடிய கூட்டமே யாகக்⋆ கொண்டு குடி வாழுங்கொல்லோ⋆
நாடும் நகரும் அறிய⋆ நல்லதோர் கண்ணாலம் செய்து⋆
சாடிறப் பாய்ந்த பெருமான்⋆ தக்கவா கைப்பற்றுங்கொல்லோ (6)

அண்டத்தமரர் பெருமான்⋆
ஆழியான் இன்றென் மகளை⋆
பண்டப் பழிப்புக்கள் சொல்லிப்⋆
பரிசற ஆண்டிடுங்கொல்லோ⋆
கொண்டு குடி வாழ்க்கை வாழ்ந்து⋆
கோவலப் பட்டம் கவித்து⋆
பண்டை மணாட்டிமார் முன்னே⋆
பாதுகாவல் வைக்குங்கொல்லோ (7)

குடியில் பிறந்தவர் செய்யும்⋆ குணம் ஒன்றும் செய்திலன் அந்தோ!⋆
நடை ஒன்றும் செய்திலன் நங்காய்!⋆ நந்தகோபன் மகன் கண்ணன்⋆
இடை இருபாலும் வணங்க⋆ இளைத்திளைத்தென் மகள் ஏங்கிக்⋆
கடைகயிறே பற்றி வாங்கிக்⋆ கை தழும்பேறிடுங்கொல்லோ (8)

வெண்ணிறத் தோய் தயிர் தன்னை⋆ வெள்வரைப் பின் முன் எழுந்து⋆
கண் உறங்காதே இருந்து⋆ கடையவும் தான் வல்லள் கொல்லோ⋆

ஒண்ணிறத் தாமரைச் செங்கண்⋆ உலகளந்தான் என் மகளை⋆
பண் அறையாப் பணிகொண்டு⋆ பரிசற ஆண்டிடுங்கொல்லோ (9)

‡மாயவன் பின் வழி சென்று⋆ வழியிடை மாற்றங்கள் கேட்டு⋆
ஆயர்கள் சேரியிலும் புக்கு⋆ அங்குத்தை மாற்றமும் எல்லாம்⋆
தாயவள் சொல்லிய சொல்லைத்⋆ தண் புதுவைப் பட்டன் சொன்ன⋆
தூய தமிழ் பத்தும் வல்லார்⋆ தூ மணி வண்ணனுக்காளரே (10)

॥ பெரியாழ்வார் திருவடிகளே சரணம் ॥